**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**

**S.C. No.63/2024**

**PW1**

| | | |
|---|---|---|
| **Name** | : | கண்ணன் |
| **Father's Name** | : | சுருட்டையன் |
| **Village** | : | தீத்தான்டப்பட்டு |
| **Taluk/District** | : | செங்கம் |
| **Caste** | : | -------- |
| **Calling** | : | |
| **Religion** | : | --------- |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 13.03.2026.

A1 to 4 present.

**முதல் விசாரணை**

நான் தீத்தான்டப்பட்டு கிராமத்தில் வசித்து வருகிறேன். இதற்கு முன்பு விவசாயம் செய்து வந்தேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. அவர்கள் வேறு ஊர், நான் வேறு ஊர். இவ்வழக்கில் இறந்து போன பழனி எனது தூரத்து சொந்தம் ஆவார். அவர் எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது. எனக்கு உடல்நிலை சரியில்லை என்பதால் 15 வருடமாக வீட்டில்தான் இருக்கிறேன். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிஸ் என்னை விசாரிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ளது என்னுடைய கையொப்பம் இல்லை.

**அரசு வழக்கறிஞர் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி, அனுமதிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிஸ் விசாரணையில் கடந்த 24.11.2012 அன்று மாலை 4.45 மணிக்கு செங்கத்திலிருந்து எனது ஊரான தீத்தாண்டப்பட்டி கிராமத்திற்கு அண்ணா பஸ் என்ற தனியார் பேருந்ததில் வந்துகொண்டிருந்தேன் என்றும் அப்போது ஆஜர் எதிரிகள் பொன்னுதுரை, சிலம்பரசன், முத்து, நீலன் ஆகியோர் பஸ்ஸில் எரிக்கொண்டார்கள் என்றும் நடத்துநர்

டிக்கெட் எடுக்க சொன்னார் என்றும் அதற்கு ஆஜர் எதிரிகள் மறுத்துவிட்டதால் இறந்துபோன பழனி என்பவரும் குமார் என்பவரும் எதிரிகளிடம் ஏன் டிக்கெட் எடுக்கவேண்டியதுதானே என்று கேட்டார்கள் என்றும் எதிரிகள் நீ என்னடா எங்களை கேட்பது என்று சொல்லி பஸ் வழியில் நின்றபோது 4 எதிரிகள் சேர்ந்து பழனியை பஸ்ஸிலிருந்து வெளியே இழுத்து சராமாரியாக கைகளால் காலால் அடித்தும் உதைத்து விடடார்கள் என்றும் மீண்டும் பஸ் கிளம்பும்போது 4 எதிரிகளும் பஸ்ஸில் ஏறிவிட்டார்கள் என்றும் பஸ்ஸில் ஆஜர் எதிரிகள் குமார் என்பவரை அடித்தார்கள் என்றும் எதிரிகளிடம் எதுவாக இருந்தாலும் பேசிக்கொள்ளலாம் தகராறு செய்யாதிர்கள் என்று சொன்னேன் என்றும் அதற்கு 4பேரும் சேர்ந்து என் இடது பக்க கழுத்தை மிதித்து பேருந்திலிருந்து தள்ளினார்கள் என்றும் இது சம்மந்தமாக அடுத்தநாள் காலை செங்கம காவல் நிலையத்தில் நான் புகார் வாக்குமூலம் கொடுத்தேன் என்றும் பழனி என்பவருக்கு காயம் பெரியாக இருந்ததால் அவரை செங்கம் அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்றும் அன்று காலை 10 மணி அளவில் அவர் இறந்துவிட்டார் என்றும் சொல்லிவிட்டு எதிரிகள் எனக்கு வேண்டப்பட்டவர்கள் என்பதால் உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** இல்லை

Taken down by me in Open Court read over to the witness and acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.